**C.C.No.327/2023**

Pw1–பிரபாகரன் த/பெ.
நாள் 14.05.2024
(A1 to A4 are present. )

**மனு அனுமதிக்கப்பட்டு மனுவின்பேரில் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் பெரியார் நகரில் இருந்து ஆர்.எஸ்.மங்கலத்திற்கு வந்த எத்தனை நாட்களாக வந்து தங்கி இருக்கிறீர்கள் என்றால் சம்பவம் நடப்பதற்கு 40 முன்பு நாட்களில் இருந்து தங்கி இருக்கிறேன். பெரியார் நகரில் சுமார் 60 குடும்பங்கள் உள்ளது,

2. ஆர்.எஸ்.மங்கலத்தில் இருந்து பெரியார் நகர் செல்லும் ரோடு எந்த திசையில் செல்கிறது என்றால் வடக்கிலிருந்து தெற்கே சென்று கிழக்கே திரும்புகிறது. எங்கள் ஊரில் எத்தனை வீதிகள் உள்ளது என்றால் 2 வீதிகள் உள்ளது மற்றும் பல வீடுகள் தனித்தனியாக உள்ளது.

3. நானும் 3வது எதிரியும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். திருமணம் முடிந்து 2002ம் ஆண்டிலிருந்து 2016 ஆண்டு வரை நாங்கள் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தோம்.

4. பெரியார் நகரில் நான் கிராமத் தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற ஒரு அமைப்பு வைத்துள்ளோம். அதில் 1வது எதிரி செயலாளராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் எனது மனைவி மீது இராமநாதபுரம் நீதிமன்றத்தில் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்து அது கொரனா காலம் என்பதால் நான் ஆஜராகி அது ஒருதலைபட்சமாக எனக்கு தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான்.

5. ஒருதலைபட்சமாக ஏற்பட்ட தீர்ப்பை ரத்து செய்யக்கோரி 3வது எதிரி தரப்பில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பை பெற்ற பின் நான் வேறு ஒரு திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான்.

6. ஒருதலைபட்ச தீர்ப்பு தேதி தெரியுமா என்றால் 22.06.2020ம் தேதி தீர்ப்பானது. தீர்ப்பு வழங்கிய எத்தனை நாட்கள் கழித்து நான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் மூன்று மாதம் கழித்து நான் மறு திருமணம் செய்து கொண்டேன்.

7. என்னை அடித்து விரட்டியது சம்பந்தமாக போலிசாருக்கு எத்தனை மணிக்கு போன் செய்து சொன்னேன் என்றால் 02.15 மணிக்கு போன் செய்து தகவல் சொன்னேன். நான் தகவல் சொன்ன பத்து நிமிடத்தில் போலிசார் வந்துவிட்டார்கள்.

8. போலிஸ் வந்தபிறகு நான் போலிசாருடன் சம்பவ இடத்திற்கு சென்றேன். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது எதிரிகள் அங்கு இருந்தார்கள். ஆனால் போலிசார் அவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லவில்லை. போலிசார் என்னை தான் மிரட்டினார்கள்.

9. புகார்மனுவை நான் தான் எழுதி கொடுத்தேன். எத்தனை மணிக்கு புகாரை எழதினேன் என்றால் மாலை 05.00 மணியளவில் எழுதினேன். எதிரிகள் என்னை தாக்கியதில் ஏற்பட்ட காயத்திற்கு நான் மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை நானே அந்த காயத்திற்கு மருந்து போட்டுக் கொண்டேன்.

10. நான் அளித்த புகார்மனுவில் கையெழுத்துக்கு கீழே தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் மனுவில் தேதி குறிப்பிட்டுள்ளேன். நான் புகார் அளித்த பிறகு போலிசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் இரண்டு நாள் கழித்து காவல் நிலையம் வரச்சொல்லி என்னிடம் மனு ரசீது கொடுத்தார்கள். அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

11. 1வது எதிரி 2019ம் ஆண்டு கிராமத்தில் வரவு செலவு சம்பந்தமாக நடந்த கூட்டத்தில் நான் கிராமம் சார்பாக 1வது எதிரியிடம் கணக்கு வழக்கு பற்றி கேட்டேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் கேட்டபோது நான் மது அருந்தி இருந்தேன் என்றால் இல்லை நான் மது அருந்தவில்லை. நான் கணக்கு வழக்கு தான் கேட்டேன்.

12. மேற்படி கூட்டத்தில் கணக்கு கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரிகள் தான் என்னை அடித்தார்கள். அப்போது நானும் 3வது எதிரியும் கணவன் மனைவியாக இருந்தோம் என்றால் சரிதான். நான் கூட்டத்தில் ஏற்பட்ட சண்டையை மனதில் வைத்துக்கொண்டு எனது மனையிடம் தகராறு செய்தேன் என்றால் என்னை எதிரிகள் அடிக்கும்போது எனது மனைவி பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தார் அதனால் 3வது எதிரி மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் அது மட்டும் காரணமல்ல புகார்மனுவில் விவரங்கள் குறிப்பிட்டுள்ளேன்.

13. நான் புகார்மனுவில் எனக்கும் எனது மனைவிக்கும் குழந்தை இல்லாத காரணத்தினால் தான் விவகாரத்து செய்தேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதுவும் ஒரு காரணம் தான். நான் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதில்

எனக்கு குழந்தை இல்லை ஆனால் தற்போது எனது இரண்டாவது மனைவி கர்ப்பமாக உள்ளார்.

14. மேற்படி எனது இரண்டாவது மனைவி கர்ப்பமாக உள்ளார் என வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஆள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான்.

15. எதிரிகள் குடும்பத்திற்கும் எனது குடும்பத்திற்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு நானாகவே எனது பைக்கை எரித்துவிட்டு போலிசாருக்கு போன் செய்ததால் தான் போலிசார் என்னை மிரட்டினார்கள் என்றால் சரியல்ல.

16. நான் போன் செய்து வந்த காவலர்களில் ஒருவர் பெயர் பாலுச்சாமி, மற்றொரு காவலர் வந்திருந்தார் அவர் பெயர் தெரியாது. நான் காவல் நிலையத்தில் புகார்மனுவில் நான் காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் சொன்ன விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் ஆனால் எனது விசாரணையில் மேற்படி விவரத்தை சொன்னேன்.

17. போலிசார் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தில் நான் போலிசாருக்கு போன் செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு எனது அம்மா போனில் இருந்து போன் செய்தேன் அந்த போனை காவல் நிலையத்தில் ஒப்படைத்தீர்களா என்றால் போலிசார் என்னிடம் கேட்கவில்லை நானும் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை.

18. ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையத்தில் என் மீது எத்தனை வழக்கு உள்ளது என்றால் 1வது எதிரி கொடுத்த புகாரின் பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

19. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே எங்களுக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள்.

.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 327/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சேகர் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.அருளாந்து |
| Village | : | பெரியார் நகர் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A4 are present)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 14.05.2024

---

**முதல் விசாரணை**

1. நான் பெரியார் நகரில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

2. அ.சா.1 ற்கும் 3 வது எதிரிக்கும் திருமணம் நடந்ததில் இருந்து அவர்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது. 24.09.2022 ம் தேதியன்று மதியம் சுமார் 02.00 மணியளவில் நான் எனது வயலில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் நான்கு பேரும் மற்றும் ஒரு நபரும் அ.சா.1 ஐ அருவாள் வைத்துக்கொண்டு துரத்திக் கொண்டு வந்ததை நான் நேரடியாக பார்த்தேன்.

3. பிரபாகரன் பயந்து கொண்டு அவரது வீட்டை தாண்டி ஓடி வந்து கொண்டிருந்தார் எதிரிகள் அவரது வீட்டு முன்பு உள்ள தகர வேலியை அடித்தார்கள். மேலும் அ.சா.1 ன் வீட்டிலிருந்து சுமார் 25 அடி தள்ளி இருந்த இருசக்கர வாகனத்தை எதிரிகள் கொளுத்துடா என்று சொல்லி அந்த இருசக்கர வாகனம் எரிந்து கொண்டிருந்ததை நான் பார்த்தேன்.

4. பின்னர் என்னை பார்த்ததும் எதிரிகள் பின் வாங்கிக் கொண்டார்கள். அதில் அ.சா.1 ற்கு கையில் காயம் ஏற்பட்டதை என்னிடம் காண்பித்தார். ஓடிவரும்போதே அ.சா.1 நடந்த சம்பவத்தை கைபேசியில் வீடியோ எடுத்துக் கொண்டே வந்தார்.

5. பின்னர் இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்த விவரம் எனக்கு தெரியும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து பைக் எரிந்த இடத்தை பார்த்து படம் வரைந்த விவரங்கள் எனக்கு தெரியும்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனது வீட்டில் எத்தனை ஆடுகள் உள்ளது என்றால் 30 ஆடுகள் உள்ளது. காலை ஆடு மேய்க்க சென்றால் எப்போது வீட்டுக்கு வருவீர்கள் என்றால்

சாயுங்காலம் ஆகும். ஆடு ஊரில் இருந்து வடக்கு பக்கம் தான் ஆடுகளை மேய்த்தேன்.

2. சம்பவத்தின்போது குணசீலன் என்பவரும் அ.சா.1ஐ துரத்தி வந்தார். ஆனால் அவர் அ.சா.1ற்கு வேண்டியவர் என்பதால் அ.சா.1 அவர் மீது புகார் கொடுக்கவில்லை. இவ்வழக்கில் எரிந்துபோன பைக் எரிந்துபோன பிறகு 15 நாட்கள் அந்த இடத்திலேயே இருந்தது. சம்பவ இடத்தில் இருந்து மாடு கட்டுவதற்காக எரிந்து போன பைக்கை ஒதுக்கி போட்டுள்ளார்கள். அதன்பின்னர் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி எரிந்துபோன பைக்கை எடுத்து செல்லுமாறு சொன்னோம் அதன்பிறகு காவல் நிலையத்தில் இருந்து வந்து பைக்கை எடுத்து சென்றார்கள்.

3. நான் காவல் நிலையம், தாலுகா அலுவலகம் எல்லா இடத்திற்கும் செல்வேன் என்றால் செல்வேன். எனக்கும் எதிரிகளுக்கும் வழக்கு உள்ளது என்றால் எனக்கும் எதிரிகளுக்கும் வழக்கு இல்லை. ஆனால் என்மீது வழக்கு உள்ளது அது வேறு வழக்கு ஆகும்.

4. அ.சா.1ற்கும் 3வது எதிரிக்கும் திருமணம் நடந்ததிலிருந்து பிரச்சனை இல்லை என்றால் சரிதான். 1வது எதிரியிடம் அ.சா.1 கணக்கு வழக்கு கேட்டது சம்பந்தமாக அ.சா்.1ற்கும் எதிரிக்கம் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

5. மேற்படி பிரச்சனை காரணமாக அ.சா.1, 3வது எதிரி மீத விவாகரத்து வழக்கு தாக்கல்செய்தார் என்றால் இல்லை அ.சா.1ற்கும் 3வது எதிரிக்கும் மனஸ்தாபம் இருந்ததால் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார்.

6. 3 வது எதிரி 1 வது எதிரியின் சகோதரி ஆவார். மற்ற எதிரிகள் அவர்களின் உறவினர்கள் ஆவார்கள். அ.சா.1 ன் வீட்டை எதிரிகள் அடிக்கவில்லை என்றும் பைக்கை கொளுத்துங்கள் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாயல் சரியல்ல. அ.சா.1 எனது மருமகன் என்பதால் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறாகும்.

7. அ.சா.1 ற்கு எதிரிகள் மீது உள்ள முன்விரோதம் காரணமாக அவரே தனது வாகனத்திற்கு தீ வைத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் அவ்வாறு இல்லை என்னை விசாரித்தார்கள்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 327/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.அருள்சாமி |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.சின்னப்பன் |
| Village | : | பெரியார் நகர் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A4 are present)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 14.05.2024

---

<u>முதல் விசாரணை</u>

1. நான் பெரியார் நகரில் எனது மனைவியுடன் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

2. அ.சா1 ற்கும் 3 வது எதிரிக்கும் திருமணம் நடந்த நாளில் இருந்து குடும்ப பிரச்சனை இருந்து வந்தது24.09.2022 ம் தேதி நான் ஆர்.எஸ்.மங்கலம் சென்று விட்டு நான் வீட்டுக்கு வரும்போது, எனது மகனின் இருசக்கர வாகனம் எரிந்துகொண்டிருந்தது அப்போது 3 வது எதிரி என்னை பார்த்ததும், இதோ கிழவன் வீட்டு வண்டியையும் கொண்டு வாங்கடா அதையும் எரிக்கிறேன் என்று சொன்னார்.

3. அப்போது அங்கு போலிசாரும் நின்று கொண்டிருந்தார்கள். போலிசாரும் நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள். நான் வேகமாக எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் திரும்ப வந்து பார்த்போது எதிரிகள் அருவாளைக் கொண்டு எனது மகனை விரட்டிக் கொண்டு சென்றார்கள். எனது வீட்டு கேட்டையும் வெட்டி விட்டார்கள்.

4. எதிரிகள் எனது மகனை விரட்டும்போது எனது மகன் அதை அவரது போனில் வீடியோ எடுத்தார். அ.சா.1 காவல் நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக புகாா அளித்த விவரம் எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் சொன்னது போல சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றால் இல்லை நான் எனது கண்ணால் பார்த்தேன். அ.சா.1 எனது மகன் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.